*International Multidisciplinary Innovative Research Journal*
*An International refereed e-journal - Arts Issue*
**ISSN: 2456 - 4613**
**Volume- II (1)**
**September 2017**

# குன்றக்குடி அடிகளாரின் திருக்குறள் உரைத்திறன்

**நாகஜோதி.பா**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வே.வ. வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி
விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

திருக்குறள் உலகப் பொதுமறை என்று அனைவராலும் போற்றப்படுகிறது. திருக்குறளின் இச்சார்பற்ற நடுநிலைத்தன்மை அனைவரையும் கவர்ந்திழுக்கிறது. குறளுக்கான புதுப்புது உரைகள் எழுதுவதற்கு இச்சார்பற்ற தன்மையும் ஒரு காரணமாகிறது. திருக்குறளுக்கு அன்றிலிருந்து இன்று வரை பல புதிய உரைகள் எழுந்துள்ளன. அவ்வகையில் குன்றக்குடி அடிகளாரின் திருக்குறள் உரை தமிழிலக்கிய உலகிற்குப் புதிய வரவாக அமைந்துள்ளது. ஒரு ஆன்மீகவாதியின் உரையில் ஆன்மீகத்தின் தாக்கம் அதிகமாக இருக்கும். நடப்பியல் சார்ந்த வாழ்வியல் உண்மைகளை அவர் எங்ஙனம் உரை வழி வெளிப்படுத்தியுள்ளார் என்பதையும், அவரின் உரை மரபுகள் எவ்வாறெல்லாம் அமைந்திருக்கின்றன என்பதையும் காணும் முயற்சியே இக்கட்டுரையாகும்.

## உரை மரபுகள்

### 1.சொற்பொருள் விளக்கம் கூறுதல்

திருக்குறளைப் பதம் பிரித்துப் பொருள் விளக்கம் தருதல் என்பது உரையாசிரியர்களின் உரை மரபாக இருந்துவந்துள்ளது. இம்மரபினை அடியொற்றி குன்றக்குடி அடிகளார் பல சொற்களுக்கு விளக்கம் அளித்துள்ளார். சான்றாக

1. வாலறிவு - அறியாமைக் கலப்பில்லாத தூய அறிவு.
2. தொழுதல் - வழிபடுதல் - வழிப்படுதல் - நெறிநிற்றல் (ப.11)
3. சேர்தல் - நினைந்து இறைநெறியில் ஒன்றி நிற்றல்.
4. அவித்தர் - பயன்கொள்ளத் தக்கவாறு பக்குவப்படுத்துதல்

5. அறம் பூணுதல் - மற்றவர்களுக்குத் துன்பம் தராது இன்பம் தருதலுக்குரிய துறவற வாழ்க்கை.
6. புறத்தாறு - அறமல்லாத வழிகள். துறவு நெறி என்று வலிந்து பொருள் கொள்ளுதல் இயைபன்று. (ப.24)
7. ஒப்புரவு - சமுதாயத்திற்குப் பயன்படக் கூடிய பொது அறிவு.

இவ்வாறு ஓரிரு வரிகளில் விளக்கம் கூறியுள்ளார். பல இடங்களில் நீண்ட நயமான விளக்கம் அளித்துள்ளார்.

புகழ் - (ப.68) - புகலப்படுவது புகழ். ஒருவருடைய வாழ்க்கையின் சாதனையில் பலர் வாழும் பொழுது அந்தப்பலர் உளமாரக் கூறும் சொற்கள் புகழாகும். புகழ்வேறு, விளம்பரம் வேறு. விளம்பரமே நிலவுகிறது. புகழுடையார் யாருளர்?.

மயக்கம் - (ப.101) - எது நிலையானது என்ற கருத்தில் துணிவின்மை என்று (கு.எண்.344) பல இடங்களில் விளக்கம் அளித்துள்ளார்.

“அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை விடவேண்டும் வேண்டிய எல்லாம் ஒருங்கு” (கு.எண்.343) (ப.எண்.100)

இவ்வாறு பல இடங்களில் நயமான விளக்கம் அளித்துள்ளார்.

## 2. அதிகார விளக்கம் தருதல்

அதிகார விளக்கம் தருதல் என்பது பழைய உரை மரபுகளுள் ஒன்றாக அமைந்துள்ளது. இம்மரபினைப் பின்பற்றிக் குன்றக்குடி அடிகளார் 133 அதிகாரங்களுக்கும் விளக்கம் அளித்துள்ளார்.

சான்றாக

### கடவுள் வாழ்த்து

உயர் ஞானமும் வரம்பிலாற்றலும் உடைய கடவுளைத் தொழுது ஞானத்தையும் ஆற்றலையும் பெற்று எண்ணிய பணியை இனிதே முடித்திட விரும்பிக் கடவுளை வாழ்த்துதல்.

காணப்படுவதைக் கொண்டு காணப்படாத காரணங்களைக் கண்டுபிடிக்க, கடவுள் வாழ்த்து துணை செய்யும்.

உயிர் இன்ப துன்பங்களிலிருந்து விடுதலை பெறுதலே பிறவிக்கடல் நீந்துதல்

வைகுந்தம், சொர்க்கம் எல்லாம் இந்த மானுட உடம்பிலேயே என்ற வள்ளலார் நெறி அறிக; உய்த்துணர்க.

இதுபோல வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல், இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம் போன்ற பல

அதிகாரங்களுக்கு மிக நீண்ட விளக்கம் அளித்துள்ளார்.

சில அதிகாரங்களுக்குச் சுருக்கமான விளக்கம் அளித்துள்ளார்.

சான்றாக

**நடுவு நிலைமை**

“எல்லார்க்கும் ஒப்ப நடத்தல் - நடுவுநிலைமை.
வலிமையுடையவரிடத்தும்,
வலிமையில்லாதவரிடத்தும் ஒரே
மாதிரியாக ஒழுகுதல்
நடுவுநிலைமையாகும். நீதி காண்பதில்
ஓரஞ்சாராதிருத்தலும் நடுவுநிலைமை
பாற்பட்டதாகும்.” (ப.38)

**பிறனில் விழையாமை**

ஒழுக்கமுடைமையின் விரிவில் ஒன்று பிறனில் விழையாமை. பிறரின் மனைவியை உரிமையை விரும்புதல் அறமன்று. அதனை அடைதலும் எளிதன்று. ஒரேவழி அடைந்தாலும் பயனில்லை. துன்பமே மிகுதி. பிறனில் விழைதல் தனிமனித அளவிலும் சரி. சமூக அளவிலும் சரி கேடு பயப்பதேயாகும். (ப.45)

இவ்வாறு சில இடங்களில் சுருக்கமாகவும் விளக்கியுள்ளார். சில அதிகாரத்திற்கு ஒரே வரியில் விளக்கம் அளித்துள்ளார்.

**102 நாணுடைமை:** நன்மைக்கு மாறாகவும் நன்நெறிக்கு ஒவ்வாதனவும் செய்ய நாணுதல்.(ப.290)

**103 குடிசெயல் வகை:** ஒருவன் தான் பிறந்த குடியை வளமாக வளர்த்தல்; உயர்த்துதல். (ப.292)

இவ்வாறு ஓரிரு வரிகளில் அதிகார விளக்கம் அளித்துள்ளார்.

படிக்கின்ற வாசகர்களுக்கு வலிமையாகக் கூற வேண்டிய விஷயங்களை விரிவாகவும், விளக்கமாகவும் உரைக்கிறார். எல்லோர்க்கும் தெரிந்த செய்திகளைச் சுருக்கமாகவும் உரைத்துள்ளார் எனலாம்.

**3.அதிகார இயைபு கூறல்**

ஒவ்வொரு அதிகாரத்திற்கு முன்னும் பின்னுமுள்ள அதிகாரத்துடன் இணைத்துப் பொருள் கூறல் உரையாசிரியர்கள் சிலரின் உரை மரபாக இருந்துள்ளது. பரிமேலழகரின் உரை இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். குன்றக்குடி அடிகளார் அதிகார இயைபு கூறுதலை உரை மரபாகக் கொண்டுள்ளார்.

சான்றாக,

கடவுள் வாழ்த்து அதிகாரத்திற்கு அடுத்ததாக வான் சிறப்பு அதிகாரம்

ஏன் வைக்க வேண்டும்? என்பதற்கான விளக்கம் கூறுகிறார்.

1. “கடவுளை ஒப்ப வான்மழை உலகை வாழ்வித்துள்ள கடவுள் வாழ்த்து அதிகாரத்தை அடுத்தும் கூறப்பட்டுள்ளது. (ப.14)

2.4. அறன் வலியுறுத்தல்

“வையக வரலாற்றில் சிலபோது சாத்தான்களும் வேதங்கள் ஓதும். அதன் காரணமாக நீத்தார் எடுத்துக் கூறுதலே அறம் என்பதனை உணர்த்த நீத்தார் பெருமையைத் தொடர்ந்து அறன் வலியுறுத்தல் கூறியது.” (ப.19)

3.5. இல்வாழ்க்கை

“…. அறநெறியின் வழியதாகி அறநெறிக்கு அரணாக அமைதலின், அறம் வலியுறுத்தலினைத் தொடர்ந்து அமைந்தது இல்வாழ்க்கை.” (ப.22)

4.6. அன்புடைமை

“அன்பிலே தொடங்கி, அன்பிலே வளர்ந்து அன்பாக அமைந்து விளங்குவதால் மக்கட்பேற்றினைத் தொடர்ந்து அன்புடைமை கூறப்பெற்றது” (ப.30)

5.9. விருந்தோம்பல்

“இல்லற வாழ்க்கையின் அமைப்பே விருந்தோம்பலுக்குரியது. அதனால் இல்வாழ்க்கையினைத் தொடர்ந்து கூறப்பெற்றது.” (ப.32)

இவ்வாறு பெரும்பான்மையாக அதிகார விளக்கம் கூறும்பொழுது அதிகார இயைபு கூறியுள்ளார். இதை ஒரு உரை மரபாகப் பின்பற்றியுள்ளார் எனலாம்.

**4.மேற்கோள் கூறல்**

குன்றக்குடி அடிகளார் பல நூல்களைக் கற்றுணர்ந்த பண்பாளர் என்பதை அவருடைய இத் திருக்குறள் உரையின் மூலம் அறியலாம்.

**மேற்கோள்**

1.“தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம்” (கு.எண்.249)

என்ற குறளில் வரும் ‘மெய்ப்பொருள்’ என்ற சொல்லுக்குப் பொருளாக அப்பரின் வாக்கினை மேற்கோள் காட்டியுள்ளார்.

“சிந்தையும் தெளிவுமாகி
தெளிவினுட் சிவனுமாகி”
(அப்பர்.248 ப.72)

2. துறவு அதிகாரத்திற்கான விளக்கம் கூறுமிடத்தில் தேவாரப் பாடலை மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளார்.

“அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடை மாதரும் ஒண் பொருளும்நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓரூரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும்
தோற்றுவாய்நீ

துணையாய் என் நெஞ்சம் துடிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்துநீ
இறைவன்நீ வளர்ந்த செல்வன்நீயே"

மேலும் அதே இடத்தில் தொல்காப்பியத்தையும் மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

"காமஞ்சான்ற கடைக்கோட்காலை
ஏமஞ்சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொரு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

3. ஒரு குறளுக்கு (கு.எண்.480) விளக்கம் கூறுமிடத்து மற்றொரு குறளை (கு.எண்.220) மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

4. மாமேதை லெனினுடைய வார்த்தைகளை மேற்கோளாகக் கூறியுள்ளார். கு.எண்.486-க்கு விளக்கம் கூறுமிடத்து,

"ஓரடி பின்னே இரண்டடி முன்னே" என்ற லெனினின் வார்த்தைகளை வாசகர்கள் முன் வைக்கிறார்.

5. "சிறுபடைவான் செல்லிடம் சேரின் உறுபடைவன்
ஊக்கம் அழிந்து விடும்" (கு.எண்.498)

இக்குறளுக்குப் பொருள் கூறிவிட்டு மேற்கோளாக ரஷ்ய நாட்டுச் சரித்திரத்திலிருந்து ஒரு நிகழ்வை எடுத்துக் கூறியுள்ளார்.

"1945 - மகாயுத்தத்தில் ஹிட்லர் சோவியத்தில் படையெடுத்த போது நாட்டின் பனிச்சூழலை ஹிட்லர் படைத் தாங்காமல் தோற்க நேர்ந்தது" (ப.151)

6. அதிகார எண்.66.வினைத்தூய்மைக்கு விளக்கம் கூறுமிடத்து "எது வினை?" என்பான் கம்பன். என்று கூறி கம்பராமாயணத்தில் இருந்து மேற்கோள் கொடுத்துள்ளார்.

7. 69. தூது அதிகாரத்திற்கான விளக்கம் கூறும்பொழுது பெரிய புராணத்திலிருந்து மேற்கோள் காட்டியுள்ளார்.

"பெரியபுராணத்தில் சிவபெருமான் பரவை யாரிடம் சுந்தரருக்காகத் தூது சென்றமையை அறிக" (ப.202)

மேற்கோள்கள் இவருடைய படிப்பறிவை நமக்கு விளக்கி நிற்கின்றன. மேலும் இவருடைய சைவ சமயப் பற்றும் இம்மேற்கோள்கள் மூலம் புலனாகிறது.

## புதிய உரைமரபுகள்

அதிகார விளக்கங் கூறல், அதிகார இயைபு கூறல், பொருள் விளக்கம் கூறுதல், மேற்கோள் காட்டுதல் போன்ற பழைய உரை மரபுகளைப் பின்பற்றியிருக்கும் குன்றக்குடி அடிகளார் சில புதிய உரை மரபுகளையும் இவ்வாராய்ச்சியால் உலகிற்கு அறிமுகப் படுத்தியுள்ளார்.

1. புகழ்பெற்ற சான்றோர்களின் வார்த்தைகளையும் வரலாற்றையும் மேற்கோளாகக் காட்டுதல்.
2. இன்றைய உலகிற்கேற்ற புதுப்பொருள் உரைத்தல்.
3. புதிய நயமான விளக்கம் தருதல்.
4. புதிய நடைமுறைக்கேற்ற விளக்கம் தருதல்.

1. **புகழ் பெற்றவர்களின் வார்த்தைகளை மேற்கோளாகக் காட்டுதல்**

1. கு.எண்.486க்கு "ஓரடி பின்னே இரண்டடி முன்னே" என்ற மாமேதை லெனினின் வார்த்தைகளை மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

2. கு.எண்.554

"கூழும் குடியும் ஒருங்குஇழக்கும் கோல்கோடிச்
சூழாஅ செய்யும் அரசு"

என்ற குறள் கொடுங்கோல் ஆட்சி குறித்து விளக்கி நிற்கிறது. இதற்கு "ஜார் மன்னனின் அரசு அகற்றப்பட்ட வரலாற்றை அறிக" என்று விளக்கம் கொடுத்துள்ளார். (ப.169)

3. கு.எண்.661-ல் வினைத்திட்பம் குறித்து விளக்குவதற்கு ஒரு சம்பவத்தைக் கூறுகிறார்.

"காங்கிரசு (இ) 1989 நாடாளுமன்றத் தேர்தலின் பொழுது மனித நேயமிக்கதும்; அது நூறாண்டுகளுக்கும் மேலாகப் போற்றி வளர்த்ததுமாகிய சமயச்சார்பின்மையை இந்து வெறியர்களுக்கு அஞ்சிக் கைவிட்டது; அதனால் தோற்றது. இது மனத்திட்பம் இன்மைச் சான்று" (ப.201)

**2.புதுப்பொருள் உரைத்தல்**

வழிவழியாக முன்னோர் கூறிய பொருளை அப்படியே உரைத்தல் மட்டுமல்லாமல் இன்றைய நடைமுறைக்கேற்ற புதிய விளக்கங்களைக் குன்றக்குடி அடிகளார் கூறியுள்ளார். இவ்விளக்கங்கள் மிக நயமானதாகவும்,ஆராய்ச்சிக்குரியதாகவும், நடைமுறைக்கேற்றவாறும் அமைந்துள்ளன.

1.30.வாய்மை - அதிகாரத்திற்கான விளக்கம்,

"தமிழ் மரபு வாய்மை என்று கூறுவது உண்மை" என்று கூறுவதை விட உணர்ந்தது; சத்தியம் என்ற சொல்லை விடச் சிறந்தது. உண்மை, சத்தியம் என்ற சொற்கள் சொல்லளவிலேயே நிற்பன.

"வாய்மை என்பது நீதி, நன்மை, ஒழுக்கம் முதலியவற்றுடன் தொடர்புடையது"
(ப.84)
2.கு.எண்.322

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

"இத்திருக்குறளைப் பொருள் நோக்கிப் பார்த்தால் ஒப்புரவறிதல் என்ற அதிகாரத்திற்கு இசைவுடையதாக அமைந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, கொல்லாமைக்கு இசைவுடையது போலவும் தெரியவில்லை. ஆயினும் இந்த அதிகாரத்தில் இக்குறளை வைத்ததன் குறிப்பு யாதெனில் வாழப்பிறந்த உயிர்களுக்கு உணவு முதலியன வழங்கிப் பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்றாது பசியால் வருந்திச் சாகவிடுதலும் கொலையே யாம் என்பதாகும்" (ப.94)

**3.புதிய நயமான விளக்கம் அளித்தல்**

1.கு.எண்.343-க்கு நயமான விளக்கம் அளித்துள்ளார்.

"புலன்களின் இயக்கம் பொறிகளின் வழியது - மிருக நிலை
பொறிகளின் இயக்கம் புலன்களின் வழியது - மானிட நிலை
புலன்களிலும் அழுக்கற்ற நிலை - இறைநிலை, அருள்நிலை"

கு.எண்.383-ல் தூங்காமை அரசனுக்குத் தேவையான பண்புகளில் ஒன்று என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தூங்காமை என்றால் என்ன? என்பதற்கான புதிய விளக்கம் ஒன்றையும் அளித்துள்ளார்.

2. "தூங்காமை என்பதற்கு உறங்காமை என்று நேரிடையாகப் பொருள் கொள்ளக் கூடாது. ஒரு செயலைச் செய்ய வேண்டிய காலத்தில் செய்யாது காலந்தாழ்த்திச் செய்வது விழித்திருந்தாலும் உறங்கினதோடு ஒக்கும்" (ப.114) இவ்வாறு பல இடங்களில் நயமான விளக்கம் அளித்துள்ளார்.

**4. நடைமுறைக்கேற்ப விளக்கம் அளித்தல்**

கு.எண்.388 - முறைசெய்து காப்பாற்றும் மன்னன் என்ற சொற்றொடரில் உள்ள முறை செய்தல் என்பதற்குக் காலத்திற்கேற்ற விளக்கம் அளித்துள்ளார்.

முறைசெய்தலாவது

1. உரிமையியல், குற்றவியல் வழக்குகளில் நடுநிலையில் தீர்ப்பு வழங்குதல்.
2. கல்வி, பொருள் செய்தல், மருத்துவம் ஆகிய அனைத்துத் துறையிலும் சம வாய்ப்பளித்தல்.
3. நாட்டின் பொருளை அனைவர்க்கும் அவரவர் தம் உழைப்புக்கேற்பப் பகிர்ந்தளித்தல். (ப.112)

"வேலொடு நின்றான் இடு என்றது போலும்" என்று தொடங்கும் குறளுக்கு இன்றைய நடைமுறைக்கேற்ற விளக்கம் அளித்துள்ளார். "இன்று நமது நாட்டில் கணக்கில் வாராப்பணம் (கறுப்புப்பணம்) கணிசமான அளவு புழக்கத்தில் உள்ளது. இது தீது. வரி விதிப்பு

முறைகளும் வசூலிக்கும் முறைகளும் எளிமைப்படுத்தப் பெற்றால் கறுப்புப்பணம் குறையும். அதோடு நாட்டின் பொது அமைப்பில் ஆட்சியில் எதையும் பணம் (லஞ்சம்) கொடுத்துச் சாதிக்க வேண்டிய நிலை இல்லாமல் பொதுமைப்படுத்தி முறைப்படுத்தினால் தான் கறுப்புப்பணம் குறையும்" (ப.168)

இவ்வாறு பல இடங்களில் காலத்திற்கேற்ற விளக்கம் அளித்துள்ளார்.

**முடிவுரை**

குன்றக்குடி அடிகளார் பழைய உரை மரபுகளைப் பெரிதும் பின்பற்றி உரை எழுதியுள்ளார். சில இடங்களில் இன்றைய நடைமுறைக்கு ஏற்றவாறு பல புதிய விளக்கங்கள் அளித்துள்ளார். அதிகார இயைபு கூறுதலை அறத்துப்பால், பொருட்பால் என்ற இரண்டு இடங்களிலும் பயன்படுத்தியுள்ளார். பல நூல்களைக் கற்றுணர்ந்தவர் என்பதனை அவருடைய மேற்கோள்களின் மூலம் அறிய முடிகிறது.

**குறிப்புதவி நூல்கள்**

**முதன்மை நூல்**

1.திருக்குறள் உரை - தவத்திரு குன்றக்குடி அடிகளார், அருள்நெறிப்பதிப்பகம், குன்றக்குடி.

**துணைமை நூல்கள்**

1.திருக்குறள் - பரிமேலழகர் உரை, திருமகள் நிலையம், சென்னை.

2. உரையாசிரியர்கள் - மு.வை.அரவிந்தன், மணிவாசகர் நூலகம், மதுரை.

3. உரைமரபுகள் - இரா.மோகன், நெல்லை ந.சொக்கலிங்கம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.